**கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் மற்றும் அதன் துணைக் கம்பனிம் - 2019**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் (கூட்டுத்தாபனம்) மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் (தொகுதியின்) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டம் மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக தாபனம் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும்

முகாமைத்துவமானது தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- தாபனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 - ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | | |
| (அ) | நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் இறுதி பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பன குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியின் போதும் மீளாய்வு செய்ய வேண்டியிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட நிலைமையில் மேற்கூறப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அந்த மாற்றங்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடொன்றின் வேறுபாடாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். எனினும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதியப்பட்ட பெறுமதி ரூபா 490,101,520 ஆன தாபனத்தின் கட்டிடங்கள், குத்தகை காணிகளில் அமைந்துள்ள கட்டிடங்களை அபிவிருத்தி செய்தல், இயந்திர உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள், தளபாடங்களும் பொருத்திகளும், அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி துணைப்பாகங்கள், கருவிகள், உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பவற்றின் ஆகக்குறைந்த பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பன | தாபனத்திற்குரிய ஆதனங்கள் பல்வேறு பிரதேசங்களில் காணப்படுவதுடன், தளபாடங்கள், கணனி உபகரணங்கள் போன்ற சொத்துக்கள் ஒவ்வொரு ஆண்டின் போதும், மெய்மெய்யாய்வு செய்யப்பட்டு உரிய உறுதிப்படுத்தலை மேற்கொள்ளுதல் பிரயோக ரீதியில் வசதியீனமாகும். 2021 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் உரிய உறுதிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | நியமத்தின் 79 (ஆ) பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட எனினும் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் இழிவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற தாபனத்திற்குரிய 44 இயந்திர உபகரணங்கள், 2071 தளபாடங்களும் பொருத்திகளும், 126 மோட்டார் வாகனங்கள், 22 கருவிகளும் உபகரணங்களும், 146 அலுவலக உபகரணங்கள் மற்றும் 308 கணனிகளினதும் துணைப்பாகங்களினதும் இழிவுப்பெறுமதி என்பன நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் இழிவு பெறுமதி 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் நியமத்தின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கணக்கு குறிப்பு இலக்கம் 9.1 இன் கீழ் தாபனத்தை உள்ளடக்கிய தொகுதியில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் இழிவுப் பெறுமதியாக ரூபா 349,095,841 காண்பிக்கப்பட்டுள்ளதுடன், கணக்கு குறிப்பு இலக்கம் 9.3 இன் படி தாபனத்தின் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் இழிவு பெறுமதியாக ரூபா 348,956,141 காண்பிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | இலங்கை கணக்கீட்டு நியமம் 37 - நிதிஏற்பாடு, நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக் சொத்துக்கள்<br>--------------------------------------------- | | |
| | நியமத்தின் 31 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமொன்று நிகழத்தக்க சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் இனங்காண வேண்டியிருந்த போதிலும் தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி செயற்திட்டத்தின் கீழ் ஏற்பட்ட இருப்பு தொலைந்தமை தொடர்பாக விசாரணையில் | இதற்காக தற்போது குற்றுப்புலனாய்வு திணைக்களத்தில் வழக்கொன்று காணப்படுகின்றமையால் வழக்கிலிருந்து கிடைக்க வேண்டிய மீதியாக இந்த பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

காணப்படுகின்ற வழக்கிலிருந்து கிடைக்க வேண்டியதாக எதிர்பார்க்கப்பட்ட ரூபா 25,900,236 தொகை சொத்தாக நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருந்தது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டிடங்கள் திணைக்களத்தின் இருப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 4,143,032 ஆன கட்டிடப் பொருள் இருப்பு 2004 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பௌதீக இருப்பு தொடர்பாக கணக்காய்வுச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு மீதி அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டு முதல் இந்த மீதியை இழப்பீடாக ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பௌதீக ரீதியில் காணப்படாத சொத்துக்களை நிதிக் கூற்றுக்களில் சொத்துக்களாக இனங்காண முடியாது. |
| (ஆ) லங்கா சதொச கம்பனியின் பங்கு பங்களிப்பிற்காக தாபனம் நிதி பங்களிப்பை வழங்காதிருந்ததுடன் அதற்காக தாபனத்தால் லங்கா சதொச கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த கட்டிடத்திற்காக 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை திரண்ட வாடகைப் பெறுமதி ரூபா 66,986,483 தொகையும், லங்கா சதொச விற்பனைக் கடைகள் மற்றும் களஞ்சியத்தின் | கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தால் லங்கா சதொசவிற்கு கையளிக்கப்பட்ட பொருட்பதிவேட்டு பொருட்களின் பெறுமதி மற்றும் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் (களஞ்சியம் மற்றும் விற்பனைக்கடை கட்டிடங்கள்) இற்காக 2011.03.31 வரையான காலத்திற்கான திரண்ட நிலுவை வாடகை பணம் | வெளித்தரப்பினரால் இணக்கம் தெரிவிக்கப்படாத பெறுமதியொன்று நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு முற்பணமாக இனங்காண முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாட்டிற்காக தாபனத்தால் வழங்கப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதியான ரூபா 54,722,228 தொகையும் ஆக ரூபா 121,708,711 தொகை ஈடுசெய்யப்பட்டிருந்தது. இந்த பெறுமதியில் லங்கா சதொச கம்பனியால் ஒதுக்கப்பட்ட ரூபா 22,798,840 தொகை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் முதலீடாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 98,909,871 தொகை முதலீட்டு முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் நீண்டகால சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், அப்பெறுமதி தொடர்பாக லங்கா சதொச கம்பனியால் இணக்கப்பாடு தெரிவிக்கப்படாதிருந்ததுடன் லங்கா சதொச கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சதொசவினால் லங்கா சதொசவிற்கு பயன்படு மூலதனமாக கருதி பங்குகளை விநியோகிப்பதற்கு இலக்கம் 11/1353/540/017 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளது. மேற்கூறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி லங்கா சதொசவினால் சதொசவிற்கு ரூபா 22,798,840 தொகையான பங்குகள் விநியோகிக்கப்பட்டமையால் மிகுதி நிலுவைப் பங்கின் அளவினையும் விநியோகிக்குமாறு பல சந்தர்ப்பங்களின் போது அந்த நிறுவனத்திற்கு கோரிக்கை விடப்பட்டிருந்தது. அது தொடர்பாக நிறுவனத்தால் பதிலளிக்கப்படாமை மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினால் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (இ) | தலைமை அலுவலகம் மற்றும் சதொச மோட்டர்ஸ் அமைந்துள்ள காணியின் மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா 2,415,000,000 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதி ரூபா 2,621,600,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக காணி மற்றும் முதலீட்டு ஆதனங்களின் பெறுமதி ரூபா 206,600,000 இனால் அதிகரித்து காண்பிக்கப்படடிருந்தது. | இந்த சகல சொத்துக்களும் 2021 ஆம் ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டு முதல் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சொத்துக்களின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | மாத்தறையில் அமைந்துள்ள 2944 சதுர அடி அளவான களஞ்சியத்தின் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,532,800 ஆக இருந்த போதிலும் அது ரூபா 1,177,600 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 2,355,200 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.<br>அதன் பிரகாரம் இந்த சொத்துக்கள் தொடர்பாக ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வு ரூபா 306,176 குறைத்து கணக்கீடு செயய்ப்பட்டிருந்தது. | | |
| (உ) | மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா 112,943,520 ஆன ஹிங்குரக்கொடயில் அமைந்துள்ள கட்டிடமொன்றை அபிவிருத்தி செய்வதற்குரிய 15 விடயங்களில் ரூபா 68,868,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக குத்தகை காணிகளில் அமைந்துள்ள கட்டிடத்தை அபிவிருத்தி செய்யும் கணக்கின் மீதி ரூபா 44,075,520 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.<br>அதன் பிரகாரம் ஆண்டின் பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 1,763,021 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கின் மீதி ரூபா 8,815,015 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த சகல சொத்துக்களும் 2021 ஆம் ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டு முதல் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சொத்துக்களின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் 05 நிறுவனங்களிலிருந்து தாபனத்திற்கு கிடைத்த கட்டிட வாடகை வருமானத்திற்குரிய நிறுத்தி வைத்தல் வரி ஏற்பாட்டுப் பெறுமதி ரூபா 1,420,901 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பாக உரிய நிறுவனங்களுடன் மேலும் பரீட்சித்து 2019 ஆம் ஆண்டிற்காக நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழ் காணப்படுமாயின் 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை | நிறுத்தி வைத்தல் வரி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்கப்படும். | |
| (எ) | நிலையான வைப்பு மற்றும் காலரீதியான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 920,185 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு முதல் நிலையான வைப்பு வட்டி வங்கியினால் வழங்கப்படுகின்ற மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் தனித்தனியாக சரியாக கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு மற்றும் காலரீதியான வைப்புக்களின் வட்டி வருமானம் ரூபா 3,812,579 ஆக இருந்த போதிலும் அது ரூபா 1,974,109 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 1,838,470 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் தாபனத்திற்குரிய 13 களஞ்சியங்களை நவீன மயப்படுத்துவதற்காக சதொச இன்ஜினியரிங் என்ட் கன்ஸ்ரக்ஷன் கம்பனிக்கு செலுத்தப்பட்ட ரூபா 38,446,618 ஆன வேலை ஆரம்பிப்பு முற்பணம் (Mobilization Advance) நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நடைமுறை வேலைக் கணக்கின் மீதி அப்பெறுமானத்தால் அதிகரித்தும், வேலை ஆரம்பித்தல் முற்பணக் கணக்கின் மீதி அப்பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த நவீன மயப்படுத்தல் மூலம் களஞ்சியங்களின் பயன்தரு ஆயுட்காலம் அதிகரிப்பதுடன் சொத்துக்களின் பெறுமதியும் உயர்வடைந்துள்ளது. அதனால் உரிய சிட்டையிடப்பட்ட உடனடியாக மூலதனமாக்கப்பட வேண்டிய பெறுமதி நடைமுறை வேலைக் கணக்கில் இருந்து அகற்றப்பட்டு உரிய சொத்துக் கணக்கில் வரவு வைப்பதற்கும், சில்லறை செலவினங்கள், செலவினமாக வருமானக் கணக்கில் வரவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | வேலை ஆரம்பித்தல் முற்பணம் நடைமுறை வேலையாக கணக்கீடு செய்ய முடியாது. |
| (ஒ) | மீளாய்வாண்டின் போது இறக்குமதி செய்யப்பட்ட | 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் முன்னைய | வருமானங்கள் சரியாக கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | அரிசியில் இருந்து பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத அரிசி கிலோ கிராம் 345,084 இனை விற்பனை செய்ததால் கிடைத்த ரூபா 16,024,500 தொகை இறக்குமதி செய்யப்பட்ட அரிசி செயற்திட்டத்திற்குரிய வருமானமாக கணக்கீடு செய்யப்படாமல் தாபனத்தின் ஏனைய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட அரிசி செயற்திட்டத்தின் நட்டம் அப்பெறுமானத்தால் அதிரகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய குறிப்புகளில் இந்த மீதியை சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செய்யப்படல் வேண்டும். |
| (ஓ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கட்டிட வாடகை வீதத்தை விஞ்சிய வீதத்தின் அடிப்படையில் கட்டிட வாடகை பட்டியல் இடப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் வாடகை வருமானம் ரூபா 1,239,956 இனால் நிதிக் கூற்றுக்களில் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த பட்டியல் விநியோகித்தல் சேவைப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன், அதில் எந்தவொரு வாடகை உடன்படிக்கையும் நிதிப் பிரிவிற்கு அனுப்பப்படுவதில்லை. அதனால் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பட்டியல்களின் மாற்றங்கள் தொடர்பான தகவல்கள் சேவை பிரிவில் இருந்து கணக்காய்வு பிரிவிற்கு வழங்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சரியான வாடகை வீதத்தின் அடிப்டையில் வாடகை பட்டியல் இடப்படல் வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறவேண்டிய வாடகை மீதியாக ரூபா 250,234,789 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் இனங்காணப்படாத வைப்பு ரூபா 8,684,772 தொகை வாடகை பெறுவனவாக உறுதிப்படுத்தப்படாமல் குறைத்து | தாபனத்தால் வாடகைக்காக கிடைக்கின்ற காசோலைகள் மற்றும் பண வைப்புக்களைச் செய்வதற்கு வங்கிக் கணக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்ட ரூபா 8,684,772 ஆன இனங்காணப்படாத வைப்பு | வங்கி நடைமுறை கணக்கிற்கு கிடைக்கின்ற நேரடி அனுப்புதல்களை இனங்கண்டு சரியாக கணக்குகளில் குறிப்பிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டமை மற்றும் கூட்டுமொத்தமாக ரூபா 34,932 ஆன மறை மீதி உள்ளடக்கப்பட்டமை என்பவற்றின் காரணமாக பெறவேண்டிய வாடகை மீதி ரூபா 8,719,704 தொகை குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்கூறப்பட்ட கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. அந்த காசு வியாபார வருமானமாக கிடைத்த பணமாக இல்லாதிருந்தமையாலும், வாடகை கடன்பட்டோர் மீதிகளில் முன்னைய ஆண்டிற்காக பெறப்பட வேண்டிய கடன் மீதி காண்பிக்கப்பட்டமையாலும், இந்த பணம் வாடகை கடன்பட்டோர் மீதியில் இருந்து அகற்றப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | |
| (க) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் சதொச நிர்மாணம் மற்றும் பொறியியலாளர் கம்பனியில் இருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தபானத்திற்கு கிடைக்க வேண்டிய வாடகை மீதியில் கட்டிட பழுதுபார்த்தல் செலவினங்கள் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக அந்த கம்பனியில் இருந்து பெற வேண்டிய வாடகை மீதி ரூபா 3,041,421 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய வாடகையை உள்ளடக்கிய குறிப்பு இலக்கம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | செலவினங்கள் சரியாக இனங்கண்டு உரிய கணக்குகளில் குறிப்பிடப்படல் வேண்டும். |
| (கா) | சில கடன்பட்டோர் மீதி மற்றும் கடன்கொடுத்தோர் மீதி நிதிக்கூற்றுக்களில் மறை மீதியாக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதி முறையே ரூபா 16,737,142 மற்றும் ரூபா 79,483,133 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த மீதிகளுக்கு இடையே 2017/2019 ஆம் ஆண்டுகளில் அரிசி கொள்வனவு செய்வதற்காக கொள்வனவாளர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள மீதி காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த மீதி வருமானமாக இனங்காண்டு ஒதுக்கீடு செய்வதற்காக தேவையான அங்கீகாரத்தை பெற்று எதிர்வரும் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதனிடையே | மறை மீதியாக காண்பிக்கப் பட்டுள்ள கடன்கொடுத்தோர் மீதி மற்றும் கடன்பட்டோர் மீதி பகுப்பாய்வு செய்து சரியான மீதியை நிதிக்கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்படுகின்ற நீண்ட கால மீதிகளை இணக்கம் செய்வதற்காக மூல ஆவணங்கள் நிதிப் பிரிவிடம் காணப்படாதிருந்ததுடன், எஞ்சிய ஏனைய மீதிகளை சரியாக எதிர்வரும் கணக்குகளில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நீண்ட காலரீதியில் கொண்டுவரப்படுகின்ற காணப்படுகின்ற மீதிகளை எதிர்காலத்தில் பதிவழிக்கும் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (கி) | 2015 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 3,129,264 தொகையான கையிலுள்ள காசு மீதி பௌதீக ரீதியில் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். இந்த மீதி பரீட்சிக்கப்பட்டுள்ளதுடன், அது பௌதீகரீதியில் கூட்டுத்தாபனத்தில் காணப்படாத மீதியாகும். | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற காசு மீதி பௌதீக ரீதியில் காணப்படல் வேண்டும். |
| (கீ) | 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற செயற்பாடற்ற இரண்டு வங்கி கணக்குகளில் இனங்காணப்படாத வரவு மீதி மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளுக்குரிய கூட்டுமொத்தமான ரூபா 6,538,568 வங்கி மேலதிகப் பற்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காண்டிற்குரிய கொடுப்பனவுகள் கணக்கீடு செய்ய வேண்டியிருந்தமையால், அந்த சகல கொடுப்பனவுகளும் 2019 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், கணக்கில் காசு காணப்படாதிருந்தமையால் அந்த கொடுப்பனவுகளை நிறுத்தி வைத்து 2020 ஆம் ஆண்டின் போது பணத்தை வைப்புச் செய்யும் முறையில் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது என அறியத்தருகின்றோம். | செயற்பாடற்ற வங்கி கணக்குகளில் உள்ள மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள் காசேட்டில் உள்ளடக்கப்படாதிருந்தல் வேண்டும். |

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | எரிபொருள் செலவினம் | 28,171,284 | 21,332,739 | 6,838,545 | இந்த கொடுப்பனவுகளுக்குரிய சகல கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த உறுதிச் சீட்டுக்களுடன் கொடுப்பனவுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களும் உள்ளடக்கி மூலப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி நேரொத்த அறிக்கையின் பிரகாரமான பெறுமதியுடன் இணக்கஞ் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | லங்கா சதொச கம்பனியில் இருந்து தாபனத்திற்கு அறவிட வேண்டிய தொகை | 2,479,639,195 | 2.131,314,280 | 348,324,915 | 2019.12.31 ஆம் திகதியில் லங்கா சதொச கம்பனிக்கு மீதி உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதும், அதற்காக அவர்களினால் பதிலொன்று சபைக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. அதனால் மீதி உறுதிப்படுத்தல் நடவடிக்கைகளை செய்ய முடியாதிருந்தது. எதிர்வரும் கணக்காண்டின் போது மீதி உறுதிப்படுத்தல்களைப் பெற்று இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி நேரொத்த அறிக்கையின் பிரகாரமான பெறுமதியுடன் இணக்கஞ் செய்யப்படல் வேண்டும். |

### 1.5.4 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபனத்தின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது துணைக் கம்பனியான வ/ப சீடபிள்யூஈ செகியுரிட்டீஸ் என்ட் ஜெனரல் கம்பனி மற்றும் வ/ப சீடபிள்யூஈ கன்ஸ்ட்ரக்ஷன் அன்ட் இன்ஜினியரிங் கம்பனி என்ற கம்பனிகளின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்படாத மற்றும் கணக்காய்விற்கு உட்படுத்தப்படாத நிதிக்கூற்றுக்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. | அந்த கம்பனியால் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்காக அனுப்பப்படுகின்ற போதும், அவர்களின் நிதிக் கூற்றுக்கள் மாத்திரம் ஆக இருந்ததுடன், அவர்கள் அதற்காக பெற்ற பணிப்பாளர் சபை அங்கீகாரம் எங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட துணைக் கம்பனிகளின் கணக்குகள் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | சீடபிள்யூஈ செகியுரிட்டீஸ் என்ட் ஜெனரல் கம்பனியின் வருமான ஒதுக்கமான ரூபா 12,143,718 பெறுமதி ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களில் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் ரூபா 12,143,718 இனால் அதிகரித்தும் வருமான ஒதுக்கம் ரூபா 12,143,718 இனால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த வருமான ஒதுக்கம் தொடர்பாக சதொச பாதுகாப்பு கம்பனியிடம் இருந்து விசாரணை செய்யப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான சரியான தகவல்கள் இது வரை வழங்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டுகள் முதல் கொண்டுவரப்படுகின்ற இந்த மீதி ஒன்றிணைந்த கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | தாபனத்தினதும், துணைக் கம்பனிகளினதும் நிதிக் கூற்றுக்களை ஒன்றிணைத்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | சீடபிள்யூஈ செகியுரிட்டீஸ் என்ட் ஜெனரல் கம்பனியால் தாபனத்திற்கு பாதுகாப்பு சேவை வழங்கியதால் கிடைத்த ரூபா 7,633,273 ஆன வருமானம் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களில் தொகுதியின் நிர்வாக செலவினத்திற்காக | 2019.12.31 இல் உள்ளவாறு துணைக் கம்பனிகளுக்கு மீதி உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதும் அதற்காக அவர்களால் பதிலொன்று கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | தாபனம் மற்றும் துணைக் கம்பனிகளின் நிதிக் கூற்றுக்களை ஒன்றிணைக்கும் போது வருமானம் அல்லது செலவினங்கள் மறைப் |

| | | |
|---|---|---|
| ஈடுசெய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தொகுதியின் பாதுகாப்பு செலவினம் ரூபா 85,003 மறைப் பெறுமதியை கொண்டிருந்தது. | எதிர்காலத்தின் போது அந்த வேறுபாடுகளை இனங்காண்பதற்கும், மீதியை இணக்கம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதியில் காண்பிக்கப்பட முடியாது. |

**1.5.5 தாபனத்தின் தொடர்ச்சியான இருப்பு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் தாபனத்தின் மொத்த சொத்துக்களை விஞ்சிய மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 2,307,524,723 ஆகவும், நடைமுறைச் சொத்துக்களை விஞ்சிய நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 3,847,846,067 ஆகவும் இருந்ததுடன் அதன் காரணமாக கம்பனிக்கு தமது சொத்துக்களிலிருந்து அதன் பொறுப்புக்களுக்கு முகங்கொடுக்கும் இயலுமை மற்றும் திறைசேரி நிதி ஏற்பாட்டினை வழங்காமல் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் இயலுமை நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டது. | முகாமைத்துவத்தால் தாபனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக நிரந்தரமாக கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் காணப்படுகின்ற வளங்களிலிருந்து உச்ச பயன்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்ட போதிலும் அது தொடர்பான தேவையான ஆலோசனைகள் பொதுத் திறைசேரி மற்றும் வர்த்தக அமைச்சிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததையும் தயவுடன் அறியத்தருகின்றோம். | தாபனத்தின் பொறுப்புக்களுக்கு முகங்கொடுக்க கூடிய வகையில் சொத்து நிலைமை பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (i) | திறைசேரிக்கு செலுத்த வேண்டிய மீதி | | | | |
| (அ) | கடன் தீர்த்தல் | 98,718,402 | பெறுமதி உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | இது தொடர்பில் உறுதிப்படுத்தும் கடிதம் மக்கள் வங்கிலிருந்து கோரப்பட்டுள்ளதுடன் அந்த உறுதிப்படுத்தல் | உரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கிடைத்தவுடன் கணக்காய்விற்கு அனுப்பப்படும். | |
| (ஆ) | கடன் மறுசீரமைப்புக் கள் | 275,000,000 | பெறுமதி உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | 2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சதொச நிதிப் பிரிவில் காணப்பவில்லை என தயவுடன் அறியத்தருகின்றோம். | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (இ) | சதொச சில்ல்றை கம்பனி (SRL) | | | | |
| | கடன் கொடுத்தோர் | 655,000,000 | -மேற்படி- | 2003 ஆம் ஆண்டில் சதொச சில்லறைக் கம்பனி கலைக்கப்பட்டிருந்தது டன், இந்த மீதியில் 2003 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின் றது. தற்போது 18 வருடங்களுக்கு முன் இடம் பெற்ற இந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கா க நிதிப் பிரிவிடம் உள்ள ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது . | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு ச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| | வங்கி பொறுப்புக்கள் | 225,000,000 | | | |
| | கிடைத்த விற்பனைப் பெறுமதி | 680,000,000 | | | |
| (ஈ) | On SRL | 200,000,000 | -மேற்படி- | 2003 ஆம் ஆண்டில் சதொச சில்லறைக் கம்பனி கலைக்கப்பட்டிருந்தது டன், இந்த மீதியில் 2003 ஆம் ஆண்டு முதல் நிதிக் | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது 18 வருடங்களுக்கு முன் இடம் பெற்ற இந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் எதுவும் நிதிப் பிரிவிடம் காணப்படவில்லை. | |
| (உ) | On paddy project | 254,149,963 | பெறுமதி உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | இந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் எதுவும் நிதிப் பிரிவில் காணப்படவில்லை என அறியத்தருகின்றோம். | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ii) | நீண்டகால நிலுவை வியாபார கடன்பட்டோர் மீதி | 6,214,481 | பேரேட்டுக் கணக்கு, விலைப்பட்டியல், பற்றுச்சீட்டு, இழப்புக்கான அங்கீகாரம் | இந்த ஒவ்வொரு பேரேட்டு கணக்குகளும் 2011 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுவதுடன், அந்த பதிவேடுகளுக்குரிய தகவல்கள் தற்போது நிதிப் பிரிவில் காணப்படவில்லை. நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற மீதிகளை எதிர்காலத்தின் போது பதிவழிக்கும் குழுவிற்கு சமா்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (iii) | நீண்ட கால நிலுவை ஏனைய | 170,370,348 | விலைப்பட்டியல், பற்றுச்சீட்டு, காலப்பகுப்பாய் | 2011 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து வருகின்ற மீதிகளே | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கடன்பட்டோர் | | வு, இழப்புக்கான அங்கீகாரம் கொடுப்பனவு விபரங்கள், | இந்த கணக்குகளில் காண்பிக்கப்படுவதுடன் , எங்களால் தற்போது கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற முறைமையில் 2011 ஆம் ஆண்டு முதல் பேரேட்டு கணக்குகளின் மீதிகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டமையால் அதற்கு முன்னைய ஆண்டுகளின் பேரேட்டு கணக்குகளை பரீட்சிப்பதற்கான இயலுமை காணப்படவில்லை. அந்த மீதியை உறுதிப்படுத்துவதற்கான மூல ஆவணங்கள் கணக்கு பிரிவில் காணப்படவில்லை. | நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (iv) | ஏனைய கடன்பட்டோர் - கமட்ட சவிய செயற்திட்டம் | 42,568,994 | விலைப்பட்டியல், பற்றுச்சீட்டுக்கள் | இந்த செயற்திட்டம் 2014/2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பான பட்டியல்கள் மற்றும் பற்றுச்சீட்டுக்கள் அந்த ஆண்டுகளில் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது. | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (v) | நீண்ட கால நிலுவை வாடகை கடன்பட்டோர் | 88,071,071 | பேரேட்டுக் கணக்கு, விலைப்பட்டியல், பற்றுச்சீட்டு, காலப்பகுப்பாய்வு | இந்த மீதியை உறுதிப்படுத்துவதற்கான மூல ஆவணங்கள் கணக்கு பிரிவில் காணப்படவில்லை. | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (vi) | தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெறவேண்டிய | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வை | | | | |
| - | வ/ப சதொச சில்லறை கம்பனி | 110,878,720 | பெறவேண்டிய மீதி தொடர்பான ஆவணங்கள் | 2003 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான ஆவணங்கள் தற்போது சதொச நிதிப் பிரிவில் காணப்படவில்லை. | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| - | வ/ப லங்கா சதொச | 24,202,985 | பெறவேண்டிய மீதி தொடர்பான ஆவணங்கள் | இந்த மீதி துணைக் கம்பனிகளில் காணப்படுகின்ற நடைமுறைக் கணக்கு மீதிகளின் கீழ் லங்கா சதொச லிமிடட் இடமிருந்து கிடைக்க வேண்டிய மீதியாக 2010 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எங்களால் தற்போது கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற Busy முறைமையில் 2011 ஆம் ஆண்டு முதல் பேரேட்டு கணக்குகளின் மீதிகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டமையால் முன்னைய ஆண்டுகளின் பேரேட்டு கணக்குகள் நிதிப் பிரிவில் காணப்படவில்லை. | -மேற்படி- |
| (vii) | நியதிச் சட்ட பெறவேண்டிய மீதி - தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 234,321,615 | பெறவேண்டிய மீதி தொடர்பான ஆவணங்கள் | இது தொடர்பாக எந்தவொரு பதிவேடும் நிதிப் பிரிவில் காணப்படவில்லை. | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (viii) | நீண்டகால நிலுவை வியாபார கடன்கொடுத்தோர் மீதி | 3,519,166 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | இந்த மீதிகளுக்காக உரிய பட்டியல் தொடர்பான ஆவணங்கள் எதுவும் தாபனத்திடம் காணப்படவில்லை. | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ix) | நீண்ட கால நிலுவை ஏனைய கடன்கொடுத்தோர் மீதிகள் | 187,678,063 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | இந்த மீதி 2011 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. இதற்கான மூல ஆவணங்கள் கணக்கு பிரிவிடம் காணப்படவில்லை. | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (x) | செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி | 187,711,507 | கணிப்பீடு செய்தல் மற்றும் செலுத்துதல் | 03 கணக்கு விடயங்களில் கூட்டுமொத்தமான ரூபா 187,711,507 மீதி தயாரிக்கப்பட்டிருந்ததுடன், எங்களால் தற்போது இறைவரித் திணைக்களத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் சேகரிக்கப்பட்ட பெறுமதி சேர் வரி செலுத்துதல்கள் இணக்கம் செய்யப்படுவதுடன், அவர்களின் அறிக்கைகளின் பிரகாரம் தற்போது 2018 ஆம் ஆண்டின் இறுதிவரை உரிய வரித்தொகை செலுத்தப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள வரித் தொகை தொடர்பாக இந்த நாட்களில் இணக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றமையினால் சரியான தகவல்களின் பிரகாரம் எதிர்வரும் கணக்கீட்டு | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (xi) | வைப்புக்கள் மற்றும் முற்பணம் - நீண்டகால | 29,692,440 | வைப்பு பற்றுச்சீட்டுக்கள் | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான மூல ஆவணங்கள் கணக்குப் பிரிவிடம் காணப்படவில்லை. | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (xii) | ஏனைய முதலீடுகள் - சதொச சில்லறை கம்பனி | 171,928,690 | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | இந்த மீதி 2011 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. இதற்கான மூல ஆவணங்கள் கணக்கு பிரிவிடம் காணப்படவில்லை என அறியத்தருகின்றோம். | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (xiii) | பெற வேண்டிய வட்டிக் கணக்கில் 2018 சனவரி 01 இல் மீதி | 1,039,739 | நிலையான வைப்புக்களுக்காக வங்கியிலிருந்து கிடைத்த புதுப்பித்தல் அறிவித்தல் | இந்த கணக்கு மீதிகள் 2013 ஆம் ஆண்டின் கணக்குகளில் இருந்து கொண்டுவரப்படுகின்ற மீதியாகும். 2019 ஆம் ஆண்டிற்குரிய வட்டி பெறுவனவுகள் சரியாக சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (xiv) | விசேட செயற்திட்டத்திற் காக செலுத்த வேண்டிய மீதி | | | | |
| (அ) | Crate payable | 7,731,857 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | தற்போது இந்த ஆவணங்கள் நிதிப் பிரிவில் காணப்படவில்லை. | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுறவு | 19,926,051 | விலைப்பட்டியல், | இந்த மீதி கூட்டுறவு | உரிய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அபிவிருத்தித் திணைக்களம் | | கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | அபிவிருத்தி திணைக்களத்தால் சதொசவிற்கு 2011 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட கடன் பணமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் ரூபா 19,926,051 செலவு மீதியொன்று இந்த கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது. | சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | Millers Payables | 47,753,691 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | இந்த மீதியில் உள்ளடக்கப்படுகின்ற மீதிகளுக்கு இடையே ரூபா 16,500,960 மீதி 2011 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற மீதியாகும். இந்த மீதி தொடர்பான மூல ஆவணங்கள் காணப்படாமையினால் பதிவழிப்பதற்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எஞ்சிய மீதி 2011 ஆம் ஆண்டின் பின்னர் 2017 ஆம் ஆண்டு வரை பேரேட்டு கணக்குகளில் காணப்படுகின்ற மீதியாகும். இந்த மீதிகளை இணக்கம் செய்து 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | பொதியிடல் பொருட்கள் | 10,191,665 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | இந்த செயற்திட்டம் 2011 ஆம் ஆண்டு முதல் 2014 வரை அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், மூல | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஆவணங்கள் நிதிப் பிரிவில் காணப்படவில்லை என அறியத்தருகின்றோம். | செல்லப்பட வேண்டும். |
| (உ) | போக்குவரத்து | 5,275,761 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | இந்த செயற்திட்டம் 2011 ஆம் ஆண்டு முதல் 2014 வரை அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், மூல ஆவணங்கள் நிதிப் பிரிவில் காணப்படவில்லை என அறியத்தருகின்றோம். | பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ஊ) | மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் (Millers) | 4,605,106 | கொடுப்பனவு பற்றுச்சீட்டு | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | Other Paddy Operations | 11,523,151 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | சோள செயற்திட்டம் (Maize Project) | 16,442,700 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | இந்த செயற்திட்டம் 2016 – 2017 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இதன் போது CIC Grain நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதிகள் காணப்படாமையால் இந்த செயற்திட்டத்திற்காக நியமிக்கப்பட்ட கொடுப்பனவு குழுவினால் அந்த கொடுப்பனவுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதில் குறிப்பிடப்படுவது அந்த நிறுவனத்திற்கு | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | செலுத்துவதற்கான மிகுதி தொகையாகும். இந்த செயற்திட்டத்திற்குரிய ஆவணங்களை கணக்காய்வு பிரிவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஐ) | அரிசி ஏற்றுமதி செயற்திட்டம் | 22,797,153 | விலைப்பட்டியல், கொடுப்பனவு விபரங்கள், காலப்பகுப்பாய்வு | செயற்திட்டம் 2013/2014 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், 2013.07.31 ஆம் திகதி தலைமை அலுவலகத்தில் 07 ஆவது மாடியில் ஏற்பட்டிருந்த திடீர் தீ விபத்தின் காரணமாக நிறுவனத்திற்கு சொந்தமான பழைய ஆவணங்கள் அநோகமானவை தீப் பிடித்து அழிவிற்கு உட்பட்டிருந்தது. அதன் காரணமாக இதில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஆவணங்களை (2013 ஆம் ஆண்டிற்கு முன்னைய காலத்திற்கு உரிய) சமர்ப்பிப்பதற்கான இயலுமை காணப்படாதிருந்ததையும் குறிப்பிடுகின்றோம். | மூல அவணங்களின் பாதுகாப்பு தொடர்பாக பாதுகாப்பு ஏற்பாடுகள் ஈடுபடுத்தப்படல் வேண்டும். |

## 1.6 பெவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீண்ட காலம் முழுவதும் பெறவேண்டிய வாடகையாக காண்பிக்கப்பட்ட ரூபா 88,071,071 தொகையை அறவிடுவதற்கு தாபனத்தால் நடவடிக்கை | இதில் குறிப்பிடப்பட்ட வாடகைப் பணம் தொடர்பாக எந்தவொரு மூல ஆவணமோ அல்லது இந்த பேரேட்டு கணக்குகள் | பெறவேண்டிய வாடகை அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்படாதிருந்ததுடன், இழப்பீடுகளுக்காக 100 சதவீத நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | தயாரிக்கப்பட்டுள்ள முறை தொடர்பாகவோ கண்டறிவதற்கு 2011 ஆம் ஆண்டிற்கு முன்னைய தாபனத்தின் ஆரம்ப பேரேடுகள் காணப்படாமையினால் இந்த மீதியை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எதனையும் எடுப்பதற்கு முடியாதிருந்தது. நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற இந்த மீதிக்காக பணத்தை பெற்றுக்கொள்ளும் இயலுமை குறைவடைந்திருந்தமையால் கணக்கீட்டு நியம இலக்கம் 36 இல் வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் படி இழப்பீட்டு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பெறவேண்டிய வியாபார மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 64,538,436 கூட்டுத்தொகையான மீதியில் எந்தவொரு தொகையையும் அறவிடுவதற்கு தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் ஆலோசனையின் படி குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களால் இந்த மீதிகளை உரிய நிறுவனங்களுடன் இணக்கம் செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | தொடர்புடைய தரப்பினரிடம் இருந்து அறவிட வேண்டிய மீதியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 24,202,985 தொகை தாபனத்தால் அறவிடப்படாதிருந்ததுடன், 100 சதவீத இழப்பீட்டிற்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இந்த மீதி துணைக் கம்பனிகளில் காணப்படுகின்ற நடைமுறைக் கணக்கு மீதியின் கீழ் லங்கா சதொச நிறுவனத்திடம் இருந்து பெறவேண்டிய மீதியாக 2010 இன் நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. எங்களால் தற்போது கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற முறைமையில் 2011 ஆம் ஆண்டு முதல் பேரேட்டு | அறவிட வேண்டிய மீதியை அறவிடுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கணக்கு மீதி மாத்திரம் உள்ளடக்கப்பட்டமையால் அதற்கு முன்னைய ஆண்டுகளின் பேரேட்டு கணக்குகளை பரீட்சிப்பதற்கான இயலுமை காணப்படவில்லை. அதனால் இந்த மீதி தயாரிக்கப்பட்டுள்ள முறை தொடர்பாக பதிலளிப்பதற்கு போதியளவான சான்றுகள் நிதிப் பிரிவிடம் காணப்படவில்லை. அதனால் இதில் காண்பிக்கப்பட்டுள்ள மீதியை அறவிடுவதற்கான இயலுமை காணப்படாதிருந்தமையால் கணக்கீட்டு நியம இலக்கம் 36 இல் காண்பிக்கப்பட்டுள்ள படி இழப்பீட்டிற்காக ஒதுக்கங்கள் மேற்கொண்டு நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி செயற்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனிக்கு ரூபா 436,164,234 பெறுமதியான அரிசி இருப்பு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டி காணப்பட்ட ரூபா 118,011,334 தொகையை தீர்ப்பதற்காக வழங்கப்பட்ட சகல காசோலைகளும் மதிப்பிழந்திருந்தது. தாபனத்தால் கடன் அடிப்படையில் அரிசி வழங்கும் போது ரூபா 100,000,000 ஆன 02 வங்கி பிணைகள் பெறப்பட்டிருந்ததுடன், அந்த பிணைகள் உண்மையான ஆவணமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்க | தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இருப்பை பெற்று ரூபா 118,011,334 தொகையான மோசடி தொடர்பாக, மதிப்பிழந்த காசோலைகளை வழங்குதல் மற்றும் போலியான வங்கி பிணைமுறியை வழங்கியமை தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டு அது தொடர்பாக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன், கொழும்பு வணிக நீதிமன்றத்தில் சிவில் வழக்கும் இது தொடர்பாக விசாரணையில் உள்ளது. | கடன் அடிப்படையில் பொருட்களை வழங்கும் போது அறவிடும் இயலுமை தொடர்பாக உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வில்லை. மேலும், கம்பனியால் தொடர்ச்சியாக கடன் செலுத்தப்படாதிருக்கும் போதும் கம்பனிக்கு தொடர்ச்சியாக அரிசி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் , மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இந்த வங்கி பிணைமுறி பிழையான ஆவணமாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த பணத்தை செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டமையால் தாபனத்தால் குற்றப்புலானய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் காணப்பட்டது. | | |
| (உ) | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனைக்காக கொள்வனவாளர்களிடம் இருந்து அறவிட வேண்டிய பணமாக 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 5,574,811 தொகை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. கடன் அடிப்படையில் அரிசி பெற்றுக்கொண்டமை கொள்வனவாளரால் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக அது தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு தாபனத்தால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனைக்காக உரிய நபருக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், டப்ளியூ. ஆர் விஜித என்ற நபருக்கு அரிசி விற்பனை மற்றும் பணம் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக முழுமையான கணக்காய்வு மேற்கொண்டு கணக்காய்வு அறிக்கை வழங்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் சுயாதீன கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. | கடன் அடிப்படையில் பொருட்களை வழங்கும் போது அறவிடும் இயலுமை தொடர்பாக உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு லங்கா சதொச கம்பனி மற்றும் நெல் சந்தைப்படுத்தும் சபையில் இருந்து தாபனத்திற்கு அறவிட வேண்டிய தொகை முறையே ரூபா 2,479,639,197 மற்றும் ரூபா 93,831,476 ஆக இருந்ததுடன், தாபனத்தால் லங்கா சதொச கம்பனிக்கும், நெல் சந்தைப்படுத்தும் சபைக்கும் செலுத்த வேண்டிய தொகை முறையே ரூபா 89,228,614 மற்றும் ரூபா 1,000,666,192 ஆக காணப்பட்டது. இந்த அறவிட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் பல வருட காலம் முதல் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுவதுடன், அது தொடர்பாக உரிய நிறுவனங்களுடன் இணக்கப்பாட்டிற்கு வந்து அந்த பணத்தை அறவிடுவதற்கும் மற்றும் செலுத்துவதற்கும் தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2019 செப்டம்பர் மாதத்தின் பின்னர் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் சதொச களஞ்சியம் கையளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆவணங்கள் யாவும் அந்த நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், மீதியை இணக்கஞ் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. லங்கா சதொச நிறுவனத்தில் இருந்து கிடைக்க வேண்டிய தொகையில் ஒரு பகுதி 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது அந்த நிறுவனத்தால் தாபனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மற்றும் உள்நாட்டு அரிசி விற்பனைக்காக கிடைக்க வேண்டிய மிகுதி பணத்தை செலுத்துவதற்காக லங்கா சதொசவினால் கொடுப்பனவு திட்டமொன்று முன்மொழியப்பட்டுள்ளது. லங்கா சதொசவினால் சதொச நிறுவனத்தில் இருந்து உள்நாட்டு அரிசியை பெற்றுக் கொள்வதற்காக கிடைக்க வேண்டிய தொகை 2022.09.01 ஆம் திகதி முதல் தவணையாக சதொசவிற்கு செலுத்துவதற்கு இணங்கப்பட்டமையால் அந்த தொகையில் இருந்து நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு செலுத்தப்பட்டுள்ள பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். லங்கா சதொச நிறுவனத்திடம் இருந்து | உரிய நிறுவனங்களுடன் இணக்கப்பாட்டிற்கு வந்து பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைத்தல் வேண்டும். |

சதொசவிற்கு கிடைக்க வேண்டிய தொகையின் அளவு லங்கா சதொசவிற்கு செலுத்தப்பட்டுள்ள தொகையின் அளவை விஞ்சியிருந்தமையால் அந்த பணத்தை செலுத்துவதற்கு லங்கா சதொச நிறுவனம் சமர்ப்பித்த கொடுப்பனவு திட்டம் தொடர்பாக கவனத்தில் கொண்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 103, 104 | (i) தாபனத்தால் லங்கா சதொச கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள பொருள் போக்குவரத்து சேவைக்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக பெறவேண்டிய வருமானத்தில் போக்குவரத்துகள் மேற்கொள்ளப்பட்ட ரூபா 19,299,267 ஆன வழியில் ஏற்படும் பற்றாக்குறை | வழியில் ஏற்படும் பற்றாக்குறை தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு விடயங்கள் சமர்ப்பித்து செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | வழியில் ஏற்படும் பற்றாக்குறை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. | | |
| | | (ii) 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 12 வாகன விபத்துக்களுக்கு உரியதாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. | வாகன விபத்து தொடர்பாக காப்புறுதி இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் முறையில் எதிர்காலத்தில் அது தொடர்பாக மேற்கொள்ளப்படுகின் ற ஆரம்ப விசாரனைகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்ததாக இருக்க வேண்டிய ஊழியர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டள்ளது. | வாகன விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 09 ஆம் திகதி PED/03/2019 ஆம் இலக்க மற்றும் 2018 திசெம்பர் 07 ஆம் திகதிய PED/03/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கடந்த ஆண்டின் போது தாபனம் நட்டத்தை பெற்றிருக்கும் போது மீளாய்வாண்டிற்காக தாபனத்தால் ரூபா 3,277,275 ஆன மிகை ஊதிய படி செலுத்தப்பட்டிருந்தது. | 2019 இன் வரைவு செய்யப்பட்ட கணக்குகளில் தாபனத்தின் இலாபம் வெளிப்படுத்தப்பட்டிருந் தது. இந்த வரைவு இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு 2019 ஆம் ஆண்டிற்குரிய மிகை ஊதியப் படி செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

------------------------

**2.1 நிதி விளைவுகள்**

-----------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,003,047,978 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நோரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,236,445,017 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,233,397,039 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி

செயற்திட்டங்களில் நட்டம் ரூபா 1,438,007,124 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபனத்தால் லங்கா சதொச கம்பனிக்கு வழங்கபட்ட பொருள் இருப்பு போக்குவரத்து சேவைக்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக பெற வேண்டிய வருமானத்தில் போக்குவரத்தில் இடம் பெற்ற வழியில் ஏற்படும் பற்றாக்குறை காரணமாக பட்டியல் பெறுமதியில் ரூபா 19,299,267 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | வழியில் ஏற்படும் இருப்பு பற்றாக்குறை விசாரணைக் குழுவின் பரிந்துரையின் படி நடவடிக்கை எடுத்து இழக்கப்பட்ட வருமானம் அந்த வழியில் ஏற்படும் பற்றாக்குறைக்காக பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | வழியில் ஏற்படும் பற்றாக்குறையை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீள்மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விலைகளை விட குறைவாக சதுர அடி விலை தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக, வாடகைக்கு வழங்கப்பட்ட ஆதனங்களில் இருந்து மீளாய்வாண்டில் தாபனத்திற்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 104,766,732 ஆக காணப்பட்டது. | பிரதான அலுவலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நுகர்வோர் அதிகார சபைக்காக குறைந்த பெறுமதியில் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட போதிலும், எதிர்காலத்தின் போது அதற்காக குறித்த மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் வாடகை உடன்படிக்கைக்காக கைச்சாத்திடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | மீள்மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விலைகளின் பிரகாரம் வாடகை அறவிடப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாபனத்தால் ஆதனங்களை வாடகைக்கு வழங்கும் போது எழுத்துமூல உடன்படிக்கை | ஆதனங்களின் வாடகை உடன்படிக்கை தொடர்பாக உள்ள குறைபாடுகளை | ஆதனங்களை வாடகைக்கு வழங்கும் போது |

| | | |
|---|---|---|
| கைச்சாத்திட நடவடிக்கை எடுக்காத 27 சந்தர்ப்பங்கள் மற்றும் காலாவதியான வாடகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காத 06 சந்தர்ப்பங்கள் என்பன அவதானிக்கப்பட்டன. | சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய சகல வாடகை உடன்படிக்கைகளும் பூர்த்தி செய்யப்படுகின்றது. | எழுத்துமூல உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் தபானத்திற்கு சொந்தமான ஆதனங்களுக்கிடையே வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் விளைவற்று காணப்பட்ட 207796 சதுர அடி அளவு காணப்பட்டதுடன், 2015 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வாடகையின் பிரகாரம் இந்த கட்டிடங்கள் விளைவற்று காணப்பட்டமையால் வருடாந்தம் ரூபா 80,401,440 வருமானம் தாபனத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | அவ்வப்போது பத்திரிகை அறிவித்தல்கள் பிரசுரித்து பெறுகை நடைமுறைகளின் படி தற்போது விளைவற்ற காணி அளவினை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தாபனத்தின் ஆதனங்களை வருமானம் உழைப்பதற்காக செயற்திறனாக ஈடுபடுத்துதல் வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

--------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் மொத்த பதவிகள் 365 இனை உள்ளடக்கியிருந்துடன், மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 69 ஆகவும், வெற்றிடங்களின் எண்ணிக்கை 46 ஆகவும் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக அந்த ஆண்டில் நிதிஏற்பாடு வழங்கப்படாதிருந்ததுடன், அரசாங்கத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல ஆட்சேர்ப்புக்களும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. மேலும், நிறுவனத்தின் மிகை ஊழியர்களாக 69 ஊழியர்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதும், சகல | தபானத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை பேணிச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஊழியர்களும் செயற்திட்டம் மற்றும் நாளாந்த செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் 2022 சனவரி 06 ஆந் திகதி 22 மாதங்கள் தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். தாபனத்தின் துணைக் கம்பனியான சதொச நிர்மாணம் மற்றும் பொறியியல் கம்பனியின் 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக் கூற்றுக்கள் தயாரித்து ஒன்றிணைந்த கணக்குகளை தயாரிப்பதற்கு ஒரு வருட அளவிலான தாமதம் ஏற்பட்டிருந்தமையால் தாபனத்தின் நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். 2021 ஆம் ஆண்டு முதல் குறித்துரைத்த திகதியில் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |